2019 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

பகுதிநேர நியாய விலைக் கடை

***14561—திருமதி நா. மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், ரெட்டிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில், ரெட்டிப்பட்டி பகுதியைச் சேர்ந்த 220 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, 817 குடும்ப அட்டைகளுடன் ஊத்தங்கரை–1 முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த முழுநேர நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுச் செல்ல ரெட்டிப்பட்டி கிராமப் பொதுமக்கள் வேலூர்–சேலம் தேசிய நெடுஞ்சாலையைக் கடப்பதில் உள்ள சிரமங்களைக் கருத்தில்கொண்டு, ரெட்டிப்பட்டி கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் விரைவில் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். ஆயிரம் ரூபாயை தமிழ்நாட்டு மக்களுக்கு*

அள்ளித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

கேட்டதையெல்லாம் கொடுக்கும் ஒரேயொரு அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி, ரெட்டிப்பட்டி கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலை இருக்கின்றது. அப்பகுதியில் நியாய விலைக் கடைகளில் பொருட்களை வாங்குவதற்கு வருகின்ற பொது மக்கள் நெடுஞ்சாலையைக் கடந்து செல்கின்றபோது விபத்து ஏற்படுகின்றது. ஆகவே, ஊத்தங்கரை தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி, ரெட்டிப்பட்டி கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, மாத்தூர் ஒன்றியம், கன்னடஹள்ளி ஊராட்சி, அத்திக்கானூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை இயங்கி வருகின்றது. அந்தப் பகுதிநேர நியாய விலைக் கடையில் 750 குடும்ப அட்டைகள் உள்ளன. ஆகவே, அந்தப் பகுதிநேர நியாய விலைக் கடையை, முழுநேர நியாய விலைக் கடையாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள் அத்திக்கானூர் நியாய விலைக் கடை, பகுதிநேர நியாய விலைக் கடையாகச் செயல்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அந்தக் கடை ஏறத்தாழ 1,372 குடும்ப அட்டைகளைக் கொண்டிருந்த கடை. எனவே, அந்தக் கடையிலிருந்து பிரிந்து வாலிப்பட்டி பகுதிநேர நியாய விலைக்

2019 பிப்ரவரி 12]

கடை 322 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருவதனால், அந்தக் கடையைத் திறப்பதற்கு இரண்டு நாட்களும், அத்திக்கானூர் நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு 4 நாட்களும் என, அதனுடைய விற்பனையாளர் பிரித்துக்கொண்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாரம் முழுவதும் அந்தக் கடையைத் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்பொழுது பணியாளர்களின் எண்ணிக்கை குறைவு காரணமாக, பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு வேறு பணியாளர் இல்லாததனால், அவரே திறக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதி விரைவிலே அது நிவர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி நா. மனோரஞ்சிதம் அவர்கள்.*

திருமதி நா. மனோரஞ்சிதம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், இதனைச் சரிபார்த்து அங்கே கடையைத் திறந்து வைக்கிறேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ராமன்துறை பகுதியில் மீனவர் கூட்டுறவு சொசைட்டியின்கீழ் Y28 என்ற நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடையில் கிட்டத்தட்ட 818–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் இருக்கின்றார்கள். Y28 என்ற அந்த நியாய விலைக் கடையைப் பிரித்து, புதிதாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

[2019 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்குமே தெரியும். ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். கிராமப்புறமாக இருந்தால் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்பது விதி. தாய்க் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு, 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அந்தக் கடையை அமைக்க வேண்டுமானால், இந்தச் சட்ட விதிகளுக்கு உட்பட்டிருந்தால், நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு துறை ரீதியாக நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

துணை மின் நிலையம்

***39438—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, வீரகநல்லூர் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, வீரகநல்லூர் ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான